பக்கங்கள் 24

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 03 வெள்ளிக்கிழமை 19.09.2025 | அதிர்வு 49

## திருகோணமலை கடற்பரப்பில் நிலநடுக்கம்!

திருகோணமலை கடற்பரப்பில் நேற்று மாலை 4.06 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என்று புவிச்சரிதவியல், சுரங்கப் பணி 04





# வடக்கு விரைவில் எழுச்சியடையும்!

### இந்த அரசின் காலத்தில் நிச்சயம் இது நடக்கும் என்கின்றார் ஆளுநர்

“வடக்கு மாகாணம் விரைவில் எழுச்சி பெற்ற மாகாணமாக மிளிரும். இந்த அரசின் காலத்தில் நிச்சயம் இது நடக்கும்.”

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். 02

# மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கட்சிகளின் ஒருமித்த முடிவு அவசியம்

### சஜித் அணி எம்.பிக்களிடம் இந்தியத் தூதுவர் வலியுறுத்து

“மாகாண சபைத் தேர்தலை ஜனநாயக ரீதியில் விரைவாக நடத்துமாறு இலங்கை அரசிடம் இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது. எனினும், இந்தத் தேர்தலை நடத்த சகல அரசியல் கட்சிகளும் ஒருமித்த தீர்மானத்தை எடுக்க வேண்டும்.”

– இவ்வாறு இந்தியத் தூதுவர் சந்தோஷ்ஜாவலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று முன்தினம் புதன்கிழமை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொழும் 04






ஆள்களுக்கு இடையில் ஏட்டிக்குப் போட்டி என்பது போல நாடுகளுக்கு இடையிலான ராஜதந்திரத்திலும் ஏட்டிக்குப் போட்டி இருக்கின்றது போலும்.

இலங்கையில் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்பு உரிமைகளை ரத்து செய்யும் சட்டம் மூலம் நிறைவேற்றப்பட்டமையை அடுத்து கொழும்பு விஜயராமவில் தமக்கு வழங்கப்பட்டிருந்த அரச இல்லத்தை விட்டு வெளியேற வேண்டிய இக்கட்டுக்கு உள்ளானார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அப்படி அவர் அரசு இல்லத்தை விட்டு வெளியேறி தமது தங்காலை கால்ட்டன் இல்லத்துக்குப் புறப்பட்டுச் செல்லும் விவகாரம் அரசியல் உணர்வைக் கிளப்பும் விடயமாக ஊடகங்களினால் பெரிது படுத்தப்பட்டது.

அந்த இக்கட்டு நிலையில் அதுவரை காலமும் அதிகாரத்திலிருந்த சமயம் 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally





## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். காரைநகர் சீநோர் படகுத் தளத்தின் புனரமைப்பை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு காரைநகர் சீநோர் படகுத்தளத்தில் நேற்று வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

காரைநகர் சீநோர் படகுத்தளத்தின் புனரமைப்பை வடிவமைப்புத் திட்டமும் நிகழ்வில் வைத்து உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர்,

"நான் சிறுவனாக இருந்த காலத்தில் இந்த சீநோர் நிறுவனத்தில் ஆயிரக்கணக்கானோர் பணியாற்றியதாகக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அவ்வளவு தூரம் இந்த நிறுவனம் பிரபல்யமாக இருந்தது. இன்று அதன் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது மகிழ்ச்சியாக உள்ளது. மீண்டும் இந்த நிறுவனம் முன்னரைப் போன்று ஆயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பை வழங்க வேண்டும்.

இந்த அரசு வடக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு தொழிற்சாலைகளையும் மீள உருவாக்கி வருகின்றது. எமது மாகாணத்துக்குத் தேவையாக உள்ள வேலைவாய்ப்பும், வருமான மீட்டலும் இதனூடாகக் கிடைக்கப் பெறும்.

எமது மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் கூடுதலான அக்கறையுடன் செயற்படுகின்ற அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் எமது மாகாணத்துக்கு எவ்வாறான உதவிகளைச் செய்ய வேண்டும் என்று அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கின்ற அமைச்சர் இ.சந்திரசேகர் ஆகியோர் இருவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளையும் கூறிக்கொள்கின்றேன்." – என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், இந்தத் தொழிற்சாலை எதிர்காலத்தில் மேலும் விரிவாக்கப்படும் என்றும், இந்தத் தொழிற்சாலையில் இந்தப் பிரதேசத்தவர்களுக்கே வேலைவாய்ப்பு வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க உரையாற்றினார். அவர் தனது உரையில், "காரைநகர் மிகப் பெரிய செல்வந்தர்களைக் கொண்ட பூமி என்று கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆனால், இந்தப் பிரதேசத்தில் அவ்வாறான பலர் இப்போது இல்லை. அவர்கள் யாழ்ப்பாணத்துக்கும்வெளிநாடுகளுக்கும் சென்றுவிட்டார்கள். இன்று காரைநகர் சுற்றுலாத்துறையால் அபிவிருத்தியடைந்து வருகின்றது. அப்படியான பிரதேசத்துக்கு இவ்வாறான தொழிற்சாலையின் மீள் ஆரம்பம் என்பது சிறப்பானது. நாம் எப்போது எல்லாவற்றையும் வெளியில் இருந்து கொண்டு வந்து பழக்கப்பட்ட நிலையில், இங்கேயே உற்பத்தி செய்வது என்பது முக்கியமானது." – என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தரசா, ஜெ.ரஜீவன் ஆகியோரும், கடற்றொழில் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் கூட்டுத் தாபனத்தின் தலைவர், கடற்றொழில் நீரியல்வளங்கள் பணிப்பாளர், சீநோர் நிறுவனத்தின் தலைவர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.





















# வவுனியா வடக்கு சபைத் தவிசாளருக்கு எதிராக ஆளும் கட்சி உறுப்பினர்கள் 7 பேர் வெளிநடப்பு

(கி.வசந்தன்)

வவுனியாவடக்கு பிரதேசசபைத்தவிசாளர் மக்கள் பிரச்சினைகள் பற்றிப் பேச அனுமதிக்கவில்லை எனத் தெரிவித்து, அதனை ஆட்சேபித்து உப தவிசாளா உள்ளிட்ட 7 ஆளும் கட்சி உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

வவுனியா வடக்கு பிரசே சபையின் மாதாந்த அமர்வு சபா மண்டபத்தில் தவிசாள் தி.கிருஷ்ணவேணி தலைமையில் நேற்று இடம்பெற்றது.




இதன்போது நிகழ்சி நிரலில் ஏனைய விடயங்கள் என்ற விடயம் உள்ளடக்கப்படவில்லை. கடந்த காலங்களில் எம்மால் முன் மொழியப்பட்ட விடயங்கள் 7 நாள்களுக்கு முன்னரே வழங்க வேண்டியிருந்தது. 7 நாடள்களுக்கு பின உள்ள மக்களின் அவசர நிலைமை மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலும், ஏனைய விடயங்கள் தொடர்பிலும் பேசும் போது தான் அது குறித்துக் கலந்துரையாடி முடிவு எட்ட முடியும். எனவே ஏனைய விடயங்கள் நிகழ்ச்சி நிரலில் தேவை எனவும் அதன் மூலமே மக்கள் பிரச்சினையைத் தீர்க்க முடியும் எனவும் தெரிவித்து ஆளும் கட்சி உறுப்பின்கள் சிலர் தவிசாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அதற்கு தவிசாளர் தி.கிருஷ்ணவேணி, அவ்வாறு அனுதி வழங்க முடியாது, 7 நாள்களுக்கு முன் சமர்தப்பித்த விடயங்களை மட்டுமே பேச முடியும் எனத் தெரிவித்தார்.

இதனால் தவிசாளருக்கும் ஆளுந் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனையடுத்துஉபதவிசாளர்வி.சஞ்சுதன் உட்பட ஆளும் கட்சியைச் சேர்ந்த தமிழ் தேசிய மக்கள் முன்னனி மற்றும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 7 பேர் வெளிநடப்பு செய்தனர். ஆளும் தரப்பை சேர்ந்த தமிழரக் கட்சியின் 5 உறுப்பினர்களும் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஏனைய பெரும்பான்மையின உறுப்பினர்களுடன் இணைந்து தவிசாளர் தொடர்ந்தும் சபையைக் கொண்டு நடத்தினார்.

23 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா வடக்கு பிரதேச சபையில் இலங்கை தமிழரசுக் கட்சி 5, தமிழ் தேசிய மக்கள் முன்னனி 4, ஜனநாயக தமிழ் தேசியக்கூட்டமைப்பு3என்பனஇணைந்து ஆட்சி அமைத்துள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியின் 2 உறுப்பினர்களும், சர்வஜன அதிகாரத்தின் 1 உறுப்பினரும் ஆளும் கட்சிக்கு ஆதரவாக செயற்படுகின்றனர். தேசிய மக்கள் சக்தியின் 6 உறுப்பினர்களும், இலங்கைத் தொழிலாளர் கட்சியின் 2 உறுப்பினர்களும் எதிர்கட்சியினராகச் செயற்பட்டு வருகின்றனர். இந்நிலையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் 7 பேர் வெளிநடப்பு செய்த நிலையில் எதிர் தரப்பின் ஆதரவுடன் தொடர்ந்தும் அமர்வு இடம்பெற்றது.

# ஹெரோயினுடன் ஒருவர் யாழ். குருநகரில் கைது!

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருநகர் பகுதியில் ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் குற்ற தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இதன் போது 120 மில்லி கிராம் நிறையுடைய ஹெரோயின் கைது ம் செய்யப்பட்ட நபரிடமிருந்து பொலிஸாராக் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த 36 வயதுடைய நபராவார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## செம்மணி மனிதப் புதைகுழி:

# 3 ஆம் கட்ட அகழ்வுக்கான பாதீடு நீதிமன்றத்தில் நேற்று சமர்ப்பிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி – சித்துப் பாத்தி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுக்கான பாதீடு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நேற்று இது தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. இதன்போதே சட்ட வைத்திய அதிகாரி பாதீட்டை மன்றில் சமர்ப்பித்தார்.

பாதீட்டை ஏற்ற நீதிமன்றம் முன் னேற்ற அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கு வழக்கைத் தவணையிட்டது.

பாதீட்டுக்கான அனுமதி கிடைக்கப் பெற்றால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகும் என்று சட்டத்த ரணி வி. எஸ். நிரஞ்சன் தெரிவித்தார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது நாட்டோடு இணைந்து, இயைந்து செயல்பட்ட மஹிந்த ராஜபக்ஷவுக்கு மனத்தென்பும் தைரியமும் ஆதரவும் வழங்கும் விதத்தில் நேரடியாக விஜய ராம இல்லத்துக்குச் சென்று மஹிந்தர் அங்கிருந்து புறப்பட முன்னர் அவருக்கு தெம்பூட்டித் திரும்பினார் சீனத் தூது வர்.

ஒரு முன்னாள் ஜனாதிபதியுடன் மாத்திரம் அப்படி ஊடாட்டம் காட்டி யமை சில அநாவசிய அரசியல் அதிர்வு களை ஏற்படுத்திவிடும் எனக் கருதிய சீனத் தரப்பு, அந்தக் கையோடு அடுத் தடுத்த நாள்களில் கொழும்பில் முன் னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவையும், மைத்திரிபால சிறிசேனவை யும் நேரில் சென்று சந்தித்து, குசலம் விசாரித்து, நிலைமையைச் சமாளித்துச் சரி செய்ய தனது தூதுவரை வழிப்ப டுத்தியது.

சீனத் தூதுவர் நேரில் சென்று மஹிந்தவை வாழ்த்தி, நட்புறவு காட் டிய விடயம் இந்தியாவுக்கு ஏட்டிக்குப் போட்டியான கருத்து நிலையைத் தந்து விட்டது போலும்.

கொழும்பில் உள்ள இந்திய தூதுவர் நாளை மறுதினம் பிறக்கும் அடுத்த வாரத்தில், நேரடியாக தங்காலைக்குச் சென்று கால்ட்டன் இல்லத்தில் மஹிந் தவைச் சந்தித்துப் பேச இருக்கிறார் எனத் தெரிகிறது.

மாத்தறையில் ஒரு நிகழ்வுக்கு செல்லும் இந்திய தூதுவர், அதனை ஒட்டி தங்காலையில் மஹிந்தரின் இல்லத்திற்கும் சென்று அவரைப் பார்த்து வருவார் எனக் கூறப்ப ட்டது.

மேற்படி மாத்தறை நிகழ்வு இயல் பாக ஏற்பாடு செய்யப்பட்டதா, அதற்குச் செல்லும் வழியில் மஹிந்த ராஜபக் ஷவை அவரது கால்ட்டன் இல்லத் தில் இந்தந்த் தூதுவர் சந்திக்கிறாரா அல்லது தங்காலையில் மஹிந்தவை இந்தியத் தூதர் (சீனாவுக்கு ஏட்டிக்குப் போட்டியாக) சந்திப்பதற்காகவே மாத் தறை நிகழ்ச்சி தேடி அவருக்கு ஒழுங் குபடுத்தப்பட்டதா என்பதை தெற்குச் செய்தியாளர்கள்தான் கண்டறிந்து ஊர்ஜிதப்படுத்த வேண்டும்.

⋆ ⋆ ⋆

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் எவ்வளவு தூரம் மோசமாக நடை முறைப்படுத்தப்படுகின்றது என்பதற்கு தேசிய மக்கள் சக்தி அரசின் கீழே அந்தச் சட்டம் கையாளப்பட்ட விடயம் தொடர்பான ஒரு வழக்கு வெளிப்படுத்தி நிற்கின்றது.

மாவனல்லையைச் சேர்ந்த 21 வயது டைய ஹேமாலி ஹல்பன்டெனிய விமானியாக வருவதற்கான கற்றலில் ஈடுபட்டிருக்கும் மாணவராவார். கடந்த வருடம் ஒக்டோபர் 25ஆம் திகதி தெஹிவளைப் பொலிஸார் அவரைப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.

இஸ்ரேலின்அடாவடித்தனங்களுக்கு எதிராக சமூக ஊடகங்களில் கருத்துப் பகிர்ந்தமைதான் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு. நீண்ட ஒன்பது மாத கால சட்டப் போராட்டத்திற்கு பின்னர் மிக அண்மையில்தான் அவர் பிணை யில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

கடந்த புதனன்று வழக்கு எதுவும் இல்லாமல் அவர் விடுவிக்கப்பட்டி ருக்கிறார். அவருக்கு எதிராக வழக்குத் தொடர எந்த விடயமும் - எந்த அடிப் படையும் - இல்லை என்று தெஹி வளைப் பொலிஸாரும் சட்டமா அதிபர் திணைக்களமும் இப்போது தெரிவித் திருக்கின்றன.

ஓர் இளம் மாணவன் சட்டத்துக்கு முரண் இல்லாத தன்னுடைய கருத்தை சமூக ஊடகத்தில் பகிர்ந்தமைக்காக, அவன் மீது தவறான முறையில் பயங் கரவாதத் தடுப்புச் சட்டம் கண்மூடித் தனமாக ஏவி விடப்பட்டு நீண்ட காலம் தடுப்பு காவலில் அல்லல் பட்டிருக் கிறான்.

ஜனாதிபதியின் ஒப்பத்துடன் வெளி யாகும் இத்தகைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான தடுப்புக் காவல் உத்தரவுகளை பெறுவதற்கு, முறையற்ற விதத்தில் பரிந்துரைகளை வழங்கும் பொலிஸ் அதிகாரிகள் இந் தச் சட்டத்தினால் சரியான முறையில் கையாளப்பட்டு, அவர்களின் தவறான நடவடிக்கைகளுக்கு அவர்கள் தண் டிக்கப்பட்டால் மட்டுமே, இத்தகைய தேவையற்ற - பொருத்தம் இல்லாத - மோசமான - சட்ட மீறல்களைத் தடுக்க முடியும்.

சும்மா ஓர் அப்பாவி மாணவனை சுமார் ஒரு வருட காலம் அலைக்கழித்த பொலிஸார் ஜாலியாகத் தாங்கள் கடமையைற்றிக்கொண்டு, தம்பாட்டில் திரிகிறார்கள். பாவம் அந்த மாண வன்தான்...!

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, நாடாளுமன்ற உறுப் பினர்களான காவிந்த ஜயவர்தன, ஹர்ஷண ராஜகருணா, தயாசிறி ஜய சேகர மற்றும் நளின் பண்டார ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போதே இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மேற்கண்டவாறு வலியு றுத்தியுள்ளார்.

அத்தோடு இலங்கையின் சமகால அரசியல் நிலைவரங்கள் மற்றும் உள்நாட்டில் முன்னெடுக்கப்படும் இந்திய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட் டுள்ளது.

மேலும் இந்தச் சந்திப்பின் போது பரந்தளவிலானதும் பன்முக அடிப்ப டையிலானதுமான இலங்கை – இந்திய உறவுகள் மற்றும் நாட்டின் அபிவிருத்திப் பணிகள் குறித்து கலந்துரையாடப்பட்டன என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூத ரகம் தெரிவித்துள்ளது.

## திருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆகியன தெரிவித்துள்ளன.

3.9 ரிக்டர் அளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் திருகோணமலையில் இருந்து வடகிழக்கே சுமார் 60 கிலோமீற்றர் தொலைவில் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் ஹகனத ராவ, ஹக்மான, பல்லேகல மற்றும் புத்தங்கல ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள நிலநடுக்கக் கண்காணிப்பு நிலையங்களிலும் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொறுப்புக் கூறல் ஏன் அவசியம்?

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கை தொடர்பான பொறுப்புக் கூறல் செயற்றிட்டம் மிக முக்கியமானது, இன்றியமையாதது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி தேடும் விடயங்களுக்கு மாத்திரம் அல்லாமல், உலகளாவிய ரீதியில் இது போன்ற குற்றங்களை தடுப்பதற்கும் இந்த நடவடிக்கை முக்கியமானது என்று அவர் சுட்டிக் காட்டி இருப்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இலங்கையில் 16 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்து, இன்னமும் தண்டிக்கப்படாமல் உள்ள இச்சம்பவங்கள், இன்றளவிலே காஸாவில் நிகழ்த்தப்படும் மீறல்களுக்கும், அங்கு பிரயோகிக்கப்படும் உத்திகளுக்குமான முன்னோடியாக உள்ளன என்றும் அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மாத்திரமன்றி, உலகெங்கிலும் தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை சவாலுக்கு உட்படுத்துவதற்கு இலங்கை தொடர்பான நடவடிக்கை மிக அவசியம் என வலியுறுத்தியுவதில் அர்த்தங்கள் நிறைய உள்ளன.

இலங்கை அரசாங்கத்தினால் 2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டது. அதன் விளைவாக ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். ஐக்கிய நாடுகள் சபையினால் கண்டறியப்பட்டதன் பிரகாரம் அப்போரில் ஈடுபட்ட இருதரப்பினராலும் சட்டங்களுக்குப் புறம்பான விதத்தில் மனித குலத்துக்கு எதிராக மிகமோசமான குற்றங்கள் இழைக்கப்பட்டன. இருப்பினும் அவை இயன்றளவிலே இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் சிலரால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் நிகழ்த்தப்பட்ட அட்டூழியங்களுக்கான எந்தவொரு எதிர்விளைவும் இல்லாததன் காரணமாக இது சாத்தியமாகியிருக்கின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி கூறுகின்றார்.

அதாவது இலங்கையில் நிகழ்த்தப்பட்ட இந்த யுத்தக் கொடூரங்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படாமையும், பொறுப்புக் கூறல் நடைமுறைப்படுத்தப்படாதமையும் பிற நாடுகளுக்கு இத்தகைய குற்றங்களை தாராளமாக இழைப்பதற்கான மன உறுதியை, தெம்பை, ஊக்கத்தை தந்து நிற்கின்றது என்பது புறம் ஒதுக்கத்தக்க விடயமல்ல.

இலங்கையில் இதுவரை ஆட்சி பீடமேறிய அரசாங்கங்கள் சர்வதேச சட்டத்தை நிலைநிறுத்துவதாக வாக்குறுதியளித்துவிட்டு, அதிலிருந்து விலகிச் செயற்பட்டுவந்திருப்பதன் மூலம், எதனைச் செய்தாலும் பின் விளைவுகளின்றி மீண்டுவிடலாம் என்பதைக் காண்பித்துவந்திருக்கின்றன. ஆகையினாலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸில் பொறுப்புக்கூறலைத் தொடர்ந்து வலியுறுத்துவதுடன் இலங்கையினால் நிகழ்த்தப்பட்ட சர்வதேசக் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டுவதற்குரிய ஆணையை இம்மாதம் ஜெனிவாவில் நடைபெற்றுவரும் 60 ஆவது கூட்டத்தொடரில் மீளப் புதுப்பிக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் கூறுவது சரியான வழிகாட்டலாகும்.

# யாழ்ப்பாணத்தில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் மாவட்ட விசேட போக்குவரத்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்ட விசேட போக்குவரத்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரின் பங்கேற்புடன் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபனின் வரவேற்புரையைத் தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், யாழ். மாவட்டத்தின் போக்குவரத்துப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக இவ்வாறானதொரு தனியான கூட்டத்தைக் கூட்டியமைக்காக அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

நாட்டின் பல பாகங்களிலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் சம காலத்தில் முன்னெடுக்கப்பட்டு வருவதை எல்லோரும் அறிவீர்கள் எனத் தெரிவித்த ஆளுநர், குறிப்பாக கொழும்பு மத்திய பஸ் நிலையத்தின் அபிவிருத்தி சகலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்றதொரு நவீனமயப்படுத்தல் வடக்கு மாகாணத்துக்கும் தேவைப்படுவதாகக் கோரிய ஆளுநர், ஏற்கனவே தூய்மை இலங்கை செயற்றிட்டத்தில் வடக்கில் 9 பஸ் நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமையும் நினைவு கூர்ந்தார்.

இதன் பின்னர் அமைச்சர் இ.சந்திரசேகர் தனது உரையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தின் போக்குவரத்தைத் தற்போதுள்ள நிலைமையை விடவும் மேம்படுத்துவதே அரசின் நோக்கம் என்று சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி▼















# யாழ்ப்பாணத்தில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் மாவட்ட விசேட போக்குவரத்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

தொடர்ச்சி▼

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, ”மக்களுக்கு நேரடியாகத் தாக்கம் செலுத்தும் ஒவ்வொரு விடயங்கள் தொடர்பிலும் மாவட்ட ரீதியாக ஒருங்கிணைப்புக்குழுவைத் தனித்தனியே அமைப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அதற்கு அமைவாக, யாழ்ப்பாணம் மாவட்ட போக்குவரத்து ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் நியமிக்கப்பட்டுள்ளார்.” – என்று குறிப்பிட்டார்.

அதன் பின்னர் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழான ஒவ்வொரு துறைகளின் பிரச்சினையும் தனித்தனியே ஆராயப்பட்டன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழான வேலைத்திட்டங்கள் தொடர்பில் முதலில் ஆராயப்பட்டன. இதன்போது தீவுப் பகுதிகளின் வீதி அபிவிருத்திக்காக விசேடமாக மேலதிக நிதியாக 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்படுவதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பயணிகள் கடற்போக்குவரத்து தொடர்பாகவும் ஆராயப்பட்டது. வீதி விபத்துக்கள், யாழ். மாவட்டத்தில் இயங்கும் சாரதி பயிற்சிப் பாடசாலைகள், புகையிரத திணைக்களம் தொடர்பான விடயங்களும் ஆராயப்பட்டன. குறிப்பாக கடந்த காலங்களில் இயங்கி தற்போது நிறுத்தப்பட்டுள்ள ரயில் சேவைகளை மீள ஆரம்பிக்குமாறு ஆளுநர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தினர்.

இதேவேளை, யாழ். நகரத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் மத்திய பஸ் நிலையம் தொடர்பாகவும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக நகரின் நெருக்கடி காரணமாக இது அமைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டது. அத்துடன் காங்கேசன் துறை துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலையம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, ஜெ.ரஜீவன் மற்றும் தவிசாளர்கள், அமைச்சு அதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.









# சிறுவர்களுக்கு தனி சாட்சி அறை நீதிமன்றங்களில் அமைக்கப்படும்

## நீதிஅமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவிப்பு

பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்கள் பாதுகாப்பான முறையில் சாட்சி வழங்குவதற்காக நாடு பூராகவும் உள்ள நீதிமன்றங்களில் தனியான சாட்சி அறைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோமென நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு, சிறுவர், மகளிர் விவகார அமைச்சு மற்றும் யுனிசெப் நிறுவனம் இணைந்து முன்னெடுத்த, வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சேவைகளை ஒழுங்குபடுத்தும் செயல்முறையின் ஆரம்ப நிகழ்வு கண்டியில் இடம்பெற்றது.

இதன் ஓர் அங்கமாக பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்கள் பாதுகாப்பான முறையில் சாட்சி வழங்க முடியுமான டிஜிட்டல் வசதிகள் உடைய சாட்சி அறை ஒன்றை கண்டி மேல் நீதிமன்றத்தில் திறந்துவைக்கும் நிகழ்வுக்கு நிகழ்நிலையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர்களுக்கு பாதுகாப்பாக சாட்சி வழங்குவதற்காக நீதிமன்றத்தில் சாட்சி அறை அமைப்பது இந்த நாட்டின் நீதிமன்ற கட்டமைப்பின் திருப்புமுனையாகும். பாதிக்கப்பட்ட நிலையில் சட்டத்துக்கு முன்னால் வரும் சிறுவர்களுக்கு பாதுகாப்பாக சாட்சி வழங்க முடியுமாக இருக்க வேண்டும்.

பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்களுக்கு பாதுகாப்பான முறையில் சாட்சி வழங்க முடியுமான டிஜிட்டல் வசதியுடனான சாட்சி அறை ஒன்று கண்டி மேல் நீதிமன்றத்துக்குள் திறந்துவைக்கப்படுவது இந்த நாட்டின் முதல் தடவையாகும்.

அதனால் நாடு பூராகவும் உள்ள நீதிமன்றங்களில் இந்த வசதிகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுப்போம். அதற்காக வசதிகளை வழங்கிய ஐராப்பிய சங்கம். யுனிசெப் நிறுவனம் உள்ளிட்ட அமைப்புகளுக்கு நன்றி செலுத்த வேண்டும். சிறுவர்களுக்கு பாதுகாப்பான நாடொன்றை உரித்தாக்குவதே தற்போதைய அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும். அதே நேரம் சிறுவர் பாதுகாப்புக்காக பலமான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுப்போம்.

ஏதாவது ஒரு சம்பவம் ஒன்று பொலிஸுக்கு, ஆதரவு நிலையங்களுக்கு அல்லது வேறு நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்ட நேரத்தில் இருந்து, வன்முறைக்கு முகம்கொடுத்த சிறுவர்கள் தொடர்ச்சியாக பாதுகாப்பான பொறிமுறை ஒன்றுடன் சம்பந்தப்படும் வரை விரைவாக மற்றும் சிறுவர்களுக்கு ஏற்ற ஆதரவை பெற்றுக்கொடுப்பதே இந்த முறையான செயற்பாடுகளின் நோக்கமாகும்.

இந்த வசதிகள் மூலம் பாதிக்கப்பட்டவர்களாக மாறும் சிறுவர்களுக்கு நீதிமன்ற சூழலில் இருந்து தனியான அறையில் இருந்து சாட்சி வழங்குவதற்கு இடம் வழங்கப்படுகிறது. இதன் மூலம் சிறுவர்களுக்கு குற்றவாளிகளுடன் நேருக்கு நேர் சந்திக்காமல் இருப்பதன் மூலம் அந்த பாதுகாப்பு வழங்கப்படுவதுடன் சிறுவனுக்கு முகம்கொடுக்க நேரிடுகின்ற அதிர்ச்சியும் கட்டுப்படுத்தப்படுகிறது.

எனவே வன்முறைக்கு ஆளாகியுள்ள சிறுவர்களுக்காக இந்த சேவைகளை அறிமுகப்படுத்தல், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொடுண்டுவருதல் தொடர்பில் 2024 பொகோட்டா மாநாட்டில் இலங்கை வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றாகும் என்றாகும்.” என்றார்.



# மட்டு. கருவேப்பங்கேணியில் சரஸ்வதிக்குச் சிலை!

(பழுவூரான்)

மட்டக்களப்பு கருவேப்பங்கேணி விபுலாநந்தா கல்லூரி வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலை கடந்த செவ்வாய்க்கிழமை சுப வேளையில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் ச.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், விசேட அதிதியாக மண்முனை வடக்குக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆர்.ஜெ.பிரபாகரன் கலந்து சிறப்பித்தார்.

இதன்போது சிலை அமைப்பதற்கு அனுசரணையாளராகச் செயலாற்றியவர்களுக்கும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் அதிபர் சான்றிதழ் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.













# யாழ் மாநகரசபையினர் சீல் வைத்த கடையை உடைத்து வர்த்தகத்தில் ஈடுபட்ட வியாபாரி!

## நேரில் போய் மீண்டும் சீல் வைத்த முதல்வர் மதிவதனி

யாழ்ப்பாணம் மாநகரசபையின் யாழ் நகர் சிற்றங்காடி கடைத்தொகுதியில் மாநகரசபையினால் கடந்த மாதம் பூட்டி சீல் வைக்கப்பட்டிருந்த ஒரு கடையை நபர் ஒருவர் அத்துமீறி உடைத்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டமை தொடர்பில் நேற்று முன்தினம் மாநகர முதல்வர் அவர்களுக்கு தகவல் கிடைக்கப்பெற்றது.

மேற்படி விடயம் தொடர்பில் மாநகர வருமானவரி பரிசோதகர்களைக் கொண்டு உறுதிப்படுத்திய முதல்வர், மாநகர சபையின் துறைசார் அதிகாரிகள் குழுவை மாநகரசபை உறுப்பினர்கள் சகிதம் கடையை மீண்டும் சீல் வைப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக அனுப்பிவைத்திருந்தார்.

மேற்படி மாநகரசபை குழுவினர் நீண்ட நேரம் முயற்சித்தும் மாநகரசபையினால் சீல் வைக்கப்பட்ட கடையை உடைத்த நபர், கடையைப் பூட்ட அனுமதிக்காமையினால் அந்த அங்காடித் தொகுதியில் சிறிது நேரம் அமைதியின்மை ஏற்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் தகவலறிந்த மாநகர முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா உடனடியாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் சென்றார். பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டருடன் கலந்துரையாடி, இரு பொலீஸார் முன்னிலையில் மாநகர சபை கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக அந்தக் கடையை முதல்வர் மதிவதனி தாமே முன்னின்று பூட்டிப் பொறுப்பேற்றார்.

கடையை பொறுப்பேற்ற பின்னர் கருத்து வெளியிட்ட முதல்வர் –

மாநகரசபையின் கடைகளில் இவ்வாறு சட்டவிரோதமாக இடம்பெறும் அத்துமீறல்களுக்கு ஒரு போதும் நான் அச்சப்படப் போவதில்லை. சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும். மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.– என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

பெண் முதல்வராக, தைரியமாக, எவ்வித தயக்கமும் இன்றி நேரடியாக களத்திற்கு வந்து, மாநகரசபையின் கடை மீது இடம்பெற்ற அத்துமீறலுக்கு உடனடி நடவடிக்கை எடுத்த முதல்வரின் தைரியத்தை அங்கிருந்த வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் பாராட்டினர்.

மேற்படி நடவடிக்கைக்காக நேரடியாக களத்திற்குச் சென்றிருந்த முதல்வருடன் மாநகர பிரதி முதல்வர் இ. தயாளன், மாநகரசபை உறுப்பினர்களான சாரூபன், மயூரன், தர்சானந், மாநகர ஆணையாளர், பிரதம கணக்காளர், பொறியியலாளர், வருமானவரி பரிசோதகர்கள், வேலைத்தள ஊழியர்கள் உள்ளிட்ட பலர் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


யாழ் மாநகரசபை
அறிவித்தல்

அங்காடி கடை இல 87 பூட்டி சபையால் பாரமெடுக்கப்படுகின்றது

மாநகர முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்







# மட்டு. போதனா வைத்தியசாலையில் இதய சத்திர சிகிச்சைப் பிரிவு திறப்பு

(கனகராசா சரவணன் )

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சுகாதார சேவை உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்து நோக்குடன் நிர்மாணிக்கப்பட்ட இருதயவியல் பிரிவுக் கட்டடம் நேற்று உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸவின் பங்கேற்புடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கணேசமூர்த்தி கலாரஞ்சனியின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

324 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதியின் திறப்பு விழா நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்ணசேகர, நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இருதய சத்திர சிகிச்சைப் பிரிவுடன், எண்டோஸ்கோபி பிரிவும் புனரமைப்புச் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர்கள், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இவ் வைத்தியசாலையின் குறைபாடாகத் திகழ்ந்து வரும் ஆசுஐ பிரிவு எதிர்வரும் தை மாதம் அளவில் திறந்து வைக்கப்படுமெனவும், சுகாதார துறைசார்ந்த 17 பாரிய திட்டங்களுக்கான அனுமதியைக் கடந்த அமைச்சரவை அமர்வில் சமர்ப்பித்து அவற்றிற்கும் நாம் அனுமதியினை பெற்றுள்ளோம் எனவும் அவற்றின் ஊடாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிலவும் கட்டடக் குறைபாடுகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் நாம் பூர்த்தி செய்துதருவோம் எனவும் இதன் போது அமைச்சர் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

நிகழ்வின் இறுதியில் அமைச்சர் உள்ளிட்ட அதிதிகள் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி, கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.


















# ஐக்கிய மக்கள் சக்தி கலைக்கப்படமாட்டாது! ஐ.தே.கவுடன் இணைந்து செயற்படப் பேச்சு!!

## அஜித் பி பெரேரா எம்.பி. தகவல்




சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கலைக்கப்பட மாட்டாது என்று அந்தக் கட்சியின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

தென்னிலங்கை ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்பட வேண்டும் என்பது பெரும்பாலானவர்களின் கருத்து. இதனை நாமும் ஏற்கின்றோம். இணைவு என்பது இரு தரப்புகளும் ஒரு கட்சியின் கீழ் சங்கமிப்பதா அல்லது கூட்டணியா என்பது பற்றி முடிவெடுக்கப்படவில்லை.

ஒருமித்த கருத்துடைய இரு தரப்புகளின் ஒற்றுமை என்பது மிக முக்கியம். பிரிந்திருந்ததால்தான் ஜனாதிபதித் தேர்தலில் எமக்குப் பின்னடைவு ஏற்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியில் கீழ்மட்ட அரசியல் இயந்திரம் வலுவிழந்துள்ளது. அந்தக் கட்சி ஆதரவாளர்களில் 99 சதவீதம் பேர் ஐக்கிய மக்கள் சக்தியுடன்தான் இருக்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க எமது அரசியல் குரு. அவர் கைது செய்யப்பட்டபோது நாம் கவலை அடைந்தோம். அதற்கு எதிராகக் குரல் கொடுத்தோம்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் உள்ளனர். எனவே, ஐக்கிய மக்கள் சக்தி கலைக்கப்பட மாட்டாது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவது பற்றி பேசப்பட்டு வருகின்றது." - என்றார்.

# நிதி மோசடி குற்றச்சாட்டு; ரோஹிதவிடம் வாக்குமூலம்



நிதி மோசடியுடன் தொடர்புடைய வழக்கு தொடர்பாக, நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவிடம் வாக்குமூலம் பெற்று இரண்டு வாரங்களுக்குள் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு கடுவெல நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிக்கும் போது, அவர் அமைச்சராக இருந்த காலத்தில் நிதி மோசடி நடந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார் சரத் என். சில்வா



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்காக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா நேற்று தங்காலைக்கு சென்றிருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தனக்கும் 50 ஆண்டுகளுக்கும் மேலான நெருங்கிய நட்பு இருப்பதாகவும், அந்த நட்பை பிரதிபலிக்கும் விதமாக அவரைச் சந்திக்க சென்றேன் என அவர் கூறினார்.

இதேவேளை மஹிந்த ராஜபக்ஷவை விஜேராம இல்லத்தில் இருந்து வெளியேறுமாறு கூறியமை நியாயம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அந்த தீர்மானத்தை தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டைக் காப்பாற்றிய தலைவர் இவ்வாறு நடத்தப்பட்டதற்கு வருத்தப்படுவதாகவும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார்.



# முல்லையில் எல்லைக் கிராமங்களில் தமிழ் மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து இடையூறு

## தடைகளை உடைத்து பயிர்ச்செய்கை நடக்கும் என்கிறார் ரவிகரன் எம்.பி.

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தமிழ்மக்கள் தமது பூர்வீக மானாவாரி விவசாய நிலங்களில் பெரும்போக நெற்செய்கைக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபடும்போது வனவளத்திணைக்களம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்த எல்லைக் கிராம மக்களின் விவசாய நடவடிக்கைக்கு இடையூறுகள் ஏற்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், தொடர்ந்தும் தடைகள் ஏற்படுத்தப்பட்டால் தடைகளை உடைத்தெறிந்து விவசாய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

அந்த் எல்லைக்கிராமத் தமிழ் மக்களின் அழைப்பையேற்று அப்பகுதிக்கு நேற்று நேரடியாகச் சென்று நிலஜ்மைகளை ஆராய்ந்த அவர் அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:-

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக எல்லைக்கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களைச்சேர்ந்த தமிழ்மக்கள் கடந்த 1984ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களிலிருந்து இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறாக இந்த எல்லைக் கிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்களை அவர்களுடைய பூர்வீக வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றிவிட்டு, உடனடியாக அப்பகுதித் தமிழ்மக்கள் பயன்படுத்திவந்த நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் அந்தக் குளங்களின் கீழான விவசாய நிலங்கள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சூழலில் இவ்வாறு வெளியேற்றப்பட்ட குறித்த ஆறு கிராம அலுவலர் பிரிவுகளைச்சேர்ந்த எல்லைக் கிராம மக்கள் யுத்தம் மௌனிக்கப்பட்ட பிற்பாடு கடந்த 2011ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே தமது பூர்வீக வாழிடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

இவ்வாறு மீள்குடியமர்த்தப்பட்ட பிற்பாடு அந்த மக்கள் தாம் பூர்வீகமாக நெற்செய்கையில் ஈடுபட்டுவந்த முந்திரிகைக் குளம், ஆமையன்குளம், சாம்பான்குளம் உள்ளிட்ட பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டபோது தாம் நெற்செய்கைக்குப் பயன்படுத்திவந்த குளங்கள் மற்றும் அக்குளங்களின் கீழான வயல்நிலங்களைப் பெரும்பான்மை இனத்தவர்கள் பயன்படுத்தி வருகின்றமையைக் கண்டனர்.

இந்நிலையில் பெரும்பான்மையினத்தவர்களால் அபகரிக்கப்பட்டிருந்த தமது பூர்வீக விவசாயக் குளங்களையும், அவற்றின் கீழான வயல்நிலங்களையும் விடுவிக்குமாறு கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், கருநாட்டுக்கேணி தமிழ் மக்கள் மற்றும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோரால் தொடர்ந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டபோதும் குறித்த காணிகள் விடுவிக்கப்படவில்லை.

குறித்த நீர்ப்பாசனக் குளங்களின் கீழான வயல் நிலங்கள் பலவற்றுக்கு தமிழ் மக்களிடம் ஆவணங்களும் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் குறித்த நீர்ப்பாசன வயல் காணிகளை ஆக்கிரமித்துள்ள பெரும்பான்மை இனத்தவர்களுக்கு கடந்த 2013ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் அப்போதைய அரசால் மகாவலி அதிகாரசபையின் காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி▼














# முல்லையில் எல்லைக் கிராமங்களில் தமிழ் மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து இடையூறு

## தடைகளை உடைத்து பயிர்ச்செய்கை நடக்கும் என்கிறார் ரவிகரன் எம்.பி.

தொடர்ச்சி▲

இவ்வாறாக தமது பூர்வீக நீர்ப்பாசனக் குளங்களையும், அவற்றின் கீழான நீர்ப்பாசன வயல் நிலங்களையும் இழந்துள்ள கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணிப்பகுதி எல்லைக்கிராமத் தமிழ் மக்கள் மானாவாரி நிலங்களிலேயே தற்போது தமது நெற்செய்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இத்தகைய சூழலில் இந்த மானாவாரி விவசாய நிலங்களில் தமிழ்மக்கள் நெற்செய்கை மேற்கொள்ளும்போது வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அதிகாரசபை என்பன தொடர்ச்சியாக இடையூறுகளை ஏற்படுத்திவருகின்றன.

தமிழ் மக்களுக்குரிய இந்த மானாவாரி விவசாயக்காணிகளை பெரும்பான்மை இனத்தவர்கள் ஆக்கிரமிக்கவும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

அந்த வகையில் மாரியாமுனை, கன்னாட்டி, எரிஞ்சகாடு, மேல்காட்டுவெளி, கீழ்காட்டுவெளி, பாலங்காடு, நாயடிச்சமுறிப்பு, சூரியனாறு, பூமடுகண்டல், சிவந்தாமுறிப்பு, வெள்ளைக்கல்லடி உள்ளிட்ட தமது பூர்வீக மானாவரி விவசாய நிலங்களில் தமிழ்மக்கள் இம்முறையும் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்வதற்கான தயார்ப்படுத்தல்களை முன்னெடுத்திருந்தனர்.

அவர்களை வனவளத்திணைக்களத்தினரும், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து தடுத்துவருகின்றனர் என அப்பகுதித் தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ்விடயம் தொடர்பாக கடந்த 29.08.2025அன்று இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலும் அப்பகுதி விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் அவர்களுடைய விவசாய நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்வதற்கு வனவளத் திணைக்களம் உள்ளிட்ட எவரும் இடையூறுகளை ஏற்படுத்தக்கூடாதெனவும் அக்கூட்டத்தில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இருப்பினும் தொடர்ந்தும் வனளவத் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தொடர்ந்தும் தமக்கு நெற்செய்கை மேற்கொள்வதற்கான தயார்ப்படுத்தல் வேலைகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்திவருகின்றனர் என அப்பகுதிமக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு இந்தவிடயம் தொடர்பில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு முறையீடு செய்துமிருந்தனர்.

அந்த எல்லைக் கிராம மக்களின் முறைப்பாட்டையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று கொக்குத்தொடுவாய் கமநல சேவை நிலையத்திற்குச் சென்று, கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தருடன் கலந்துரையாடியிருந்தார்.

அதனைத்தொடர்ந்து அந்த விவசாய நிலங்களுக்கு நேரடியாகச் சென்ற ரவிகரன் நிலமைகளைப் பார்வையிட்டமையுடன், பிரச்சினைகள் தொடர்பில் மக்களிடம் கேட்டறிந்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் ஃ

இந்தத் தமிழ் மக்களின் நீர்ப்பாசனக் குளங்களும் அவற்றின் கீழான நீர்ப்பாசன விவசாய நிலங்களும் ஏற்கனவே பெரும்பான்மை இனத்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்த எல்லைக் கிராமங்களைச் சேர்ந்த எமது தமிழ் மக்கள் மானாவாரி விவசாய நிலங்களில் பெரும்போக நெற்செய்கையை மாத்திரமே மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் எமது மக்கள் மானாவரி விவசாய நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்வதற்கும் வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட தரப்பினரால் இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன என மக்கள் முறையிடுகின்றனர்.


இது தொடர்பில் கடந்தமாதம் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பேசப்பட்டது. எமது மக்களின் நெற்செய்கை நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தக்கூடாதெனவும் தீர்மானமும் எட்டப்பட்டது.

இவ்வாறிருக்கு தொடர்ந்தும் எமது மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவது பொருத்தமான விடயமில்லை.

இவ்வாறு இடையூறுகளை ஏற்படுத்தினால் இந்தமக்கள் தமது வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்படும். எனவே எமது மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கின்ற வகையில் செயற்படும் திணைக்களங்களின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ளமுடியாது.

தொடர்ந்தும் எமது மக்களுக்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டால் அந்த தடைகளை உடைத்து எமது மக்கள் நெற்செய்கை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் – என்றார்.









# இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கொழும்பில்

“அயலக ஆளுமைகளுக்கு அலங்காரம்” என்ற தொனிப்பொருளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை, கொழும்பில் நடைபெறவுள்ள விழாவில் கலந்து கொள்தற்கு தமிழ்நாட்டிருந்து வருகை தந்துள்ள அந்நிகழ்வின் முக்கிய கதாநாயகரான இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர், முனீருல் மில்லத் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் மற்றும் இந்திய நாடாளுமன்ற வேலூர் தொகுதி முன்னாள் உறுப்பினர் எம்.அப்துல் ரஹ்மான்,தமிழ்நாடு சட்ட மன்ற நாகப்பட்டினம் உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ் உட்பட மற்றும் அதிதிகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படங்கள். ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் தலைவர் என்.எம்.அமீன், திருச்சி ஊடகவியலாளர் எம்.கே.ஷாகுல் ஹமீது ஆகியோரும் உடனிருந்தனர்.

# 'தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்' நூலின் வெளியீடு இன்று தமிழ்ச் சங்கத்தில்

பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய “தமிழ்த் தேசியவாத அரசியலின் எதிர்காலம்“ நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

எழுத்தாளர் வசந்தி தயாபரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை எழுத்தாளர் வி.ரி. இளங்கோவனும், கருத்துரைகளை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு உறுப்பினர் ஏ.எம். ந.ஹியா, கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறை பேராசிரியர் எஸ்.ஜெய்சங்கர், சமூக அரசியல் செயற்பாட்டாளர்கள் தெ.மதுசூதனன், யதீந்திரா ஆகியோரும் நிகழ்த்துவர். இந்த நூல் மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்தின் வெளியீடாகும்.



# மாவீரனே திலீபன்...!

**தமிழ் மக்களுக்காக உண்ணா நோன்பு இருந்து தனது உயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவு நிறைவை முன்னிட்டு இக் கவிதை பிரசுரிக்கப்படுகிறது.**

ஈழத் தமிழனுக்கு போர் மட்டுமல்ல
அகிம்சையும் தெரியும் என
பாரத தேசத்திற்கே பாடம்
புகட்டிய ஊரெழு பெற்ற
மைந்தனே திலீபன்...!

நல்லூரான் தேர் ஓடும் வீதியில்
ஐந்தம்ச கோரிக்கையை முன்வைத்து
பன்னிருநாள் பசித்திருந்தும்
பாரததேசத்திற்கு கருணையில்லை
விடைபெற்றானே திலீபன்...!

காந்திய தேசத்தின் அமைதிப்படை
அமைதியிழந்து ஈழத் தமிழன் கதற
முடிவு கட்ட எண்ணி
தனித்து உண்ணாநோன்பிருந்தாய்
தியாக தீபமே திலீபன்..!

முப்பத்தெட்டு ஆண்டுகள் கடந்தும்
ஈழத் தமிழனுக்கு நீதியில்லை
உன் கனவு பசியோடு தான்
இன்றும் இருக்கிறது
அகிம்சை வீரனே திலீபன்...!

உனது இழப்பு இனத்திற்கானது
உன் நினைவு நாளில்
தமிழர் தேசம் விடிவு பெற
ஒற்றுமையாகக் குரல் கொடுப்போம்
மாவீரனே திலீபன்..!



-மகேந்திரன் விதுஷன்-



# இதய சத்திர சிகிச்சைக் கூடச் செயற்பாடுகள் வவுனியா பொது வைத்தியசாலையில் ஆரம்பம்

(கி.வசந்தன்)

வவுனியா பொது வைத்தியசாலையில் பல ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த இருதய சத்திர சிகிச்சை நிலையம் நேற்றைய தினம் தனது செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது.

நெதர்லாந்து அரசின் நிதி உதவியோடு இருதய சத்திர சிகிச்சை கூடம் அதற்கான உபகரணங்களோடு அமைக்கப்பட்டபோதிலும் பயன்பாடின்றி காணப்பட்டது.

இந் நிலையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்த இரு வருடங்களுக்கு முன் திறந்து வைக்கப்பட்ட நிலையிலும் வைத்திய நிபுணர்கள் இன்மையால் இந்த சத்திர சிகிச்சை கூடம் செயற்படாமல் இருந்தது.

இதன் காரணமாக வவுனியா மற்றும் அதனை அண்டிய பகுதி மக்கள் யாழ் ஆதார வைத்தியசாலை மற்றும் வேறு மாவட்டங்களுக்கும் செல்ல வேண்டிய நிலைமை காணப்பட்டது.

இந்நிலையில் அண்மையில் சுகாதார அமைச்சினால் இருதய சத்திர சிகிச்சை நிபுணர் தி. வைகுந்தன் நியமிக்கப்பட்டதன் பின்னர், அவர் இந்த சத்திர சிகிச்சைக் கூடத்தை ஆரம்பிப்பதற்கான முழுமையான பணியில் ஈடுபட்டிருந்தார்.

ஆளணி பற்றாக்குறை காணப்பட்ட போதிலும் கூட யாழ் மாவட்டத்தின் சிரேஷ்ட முன்னணி இருதய சத்திர சிகிச்சை நிபுணர் பி. லக்ஸ்மன், வவுனியா இருதய சத்திர சிகிச்சை நிபுணர் எஸ். ஆர். குமார மற்றும் ஏனைய வைத்தியர்கள், வைத்தியசாலை நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் இந்த இருதய சத்திர சிகிச்சை கூடத்தில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கையில் சுமார் எட்டு வைத்தியசாலைகளிலேயே இருதய சத்திர சிகிச்சை பிரிவுகள் உள்ள நிலையில் வவுனியாவிலும் தற்போது அது செயற்பட ஆரம்பித்துள்ளமை பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.



# ஹேமசிறி, பூஜித் மீதான வழக்கை விசாரிக்க புதிய நீதிபதிகளை நியமிக்குமாறு கோரிக்கை

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுக்கத் தவறியமை தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிரான வழக்கை விசாரிப்பதற்கு புதிய மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாத்தை நியமிக்குமாறு பிரதம நீதியரசரிடம் சட்ட மாஅதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு சட்ட மாஅதிபர் அறிவித்துள்ளார்.

புலனாய்வு தகவல்கள் கிடைத்தும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமையின் மூலம் கடமையை செய்ய தவறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.




# திருமலை முத்துநகர் விவசாயிகள் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டம்

திருகோணமலை, முத்துநகர் விவசாயிகளின் சத்தியாக்கிரகப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் பொலிஸாரின் இடையூறுக்கு மத்தியில் தொடர்ந்தது.

“விவசாயிகளிடம் இருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்துநகர் விளைநிலங்களை உடனடியாக திருப்பிக் கொடு”, “இந்தியக் கம்பனிகளின் நில மற்றும் வளச் சூறையாடலுக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்குவோம்” போன்ற பதாதைகளை ஏந்தியவாறு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, இன்று திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் மாவட்ட செயலகத்துக்கு முன்பாகவே இந்தப் போராட்டம் இடம்பெறுகின்றது.

இந்நிலையில், பொலிஸார் போராட்டக்காரர்களின் இடத்தை அகற்ற முற்பட்டபோதும் கூட அவர்களால் அதனை அகற்ற முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சூரிய மின் சக்திக்கு வழங்கப்பட்ட விவசாயக் காணிகளை மீளப் பெற்றுத் தருமாறு கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.










# பிரபல நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கர் காலமானார்

பிரபல நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கர் உடல்நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது 46.

விஜய் சேதுபதி நடித்த 'இதற்குத் தானே ஆசைப்பட்டாய்' பாலகுமாரா படத்தில்தான் முழுநீள கதாபாத்திரம் இவருக்கு கிடைத்தது. பின்னர் தொடர்ந்து 'கப்பல்', 'மாரி', 'வாயை மூடி பேசவும்' என அடுத்தடுத்து பட வாய்ப்புகள் கிடைத்தன. விஷ்ணு விஷாலின் 'வேலைன்னு வந்துட்டா வெள்ளைக்காரன்' படத்தில் இவரது நகைச்சுவை மிகப்பெரிய வரவேற்பை பெற்றது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு மஞ்சள் காமாலை ஏற்பட்டதால் கடுமையாக உடல் எடை குறைந்து காணப்பட்டார் ரோபோ சங்கர். பின்னர் மெல்ல தேறி வந்த அவர் மீண்டும் திரைப்படங்களிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் தோன்றினார்.

இந்த நிலையில், அண்மையில் உடல்நலக் குறைவால் சென்னை பெருங்குடியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி ரோபோ சங்கர் உயிரிழந்தார். அவரது மறைவுக்கு திரையுலகபிரபலங்கள், ரசிகர்கள்பலரும்இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.





## 'தமிழ்நாட்டு மக்களை மகிழ்வித்தவர்'

# ரோபோ சங்கர் மறைவுக்கு முதல்வர் ஸ்டாலின் இரங்கல்

நடிகர் ரோபோ சங்கர் மறைவுக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

"திரைக்கலைஞர் ரோபோ சங்கர் மறைவெய்திய செய்தியறிந்து வருத்தமுற்றேன். மேடைகளில் துவங்கி, சின்னத்திரை – வண்ணத்திரை என விரிந்து, தமிழ்நாட்டு மக்களை மகிழ்வித்தவர் ரோபோ சங்கர். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் – கலையுலகினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# நேபாள அமைதியை மீட்கும் முயற்சிக்கு இந்தியா உறுதியான ஆதரவை வழங்கும்

## பிரதமர் சுசீலாவிடம் மோடி உறுதி

நேபாள பிரதமர் சுசீலா கார்கி உடன் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

இதன்போது, நேபாளத்தில் அமைதி மற்றும்ஸ்திரத்தன்மையைமீட்டெடுப்பதற்கான அவரது முயற்சிக்கு இந்தியாவின் உறுதியான ஆதரவை வழங்கும் என பிரதமர் மோடி தெரிவித்தார்.

நேபாள பிரதமர் சுசீலா கார்கி உடன் நிகழ்த்திய தொலைபேசி உரையாடல் குறித்து பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவில் அவர் குறிப்பிடுகையில்,

“நேபாள இடைக்கால அரசாங்கத்தின் பிரதமர் சுசீலா கார்கி உடன் ஒரு அன்பான உரையாடல் நிகழ்த்தினேன். சமீபத்திய துயரகரமான உயிர் இழப்புகளுக்கு மனமார்ந்த இரங்கலை தெரிவித்தேன்.

மேலும், நேபாளத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான அவரது (பிரதமர் சுசீலா கார்கி) முயற்சிகளுக்கு இந்தியா உறுதியான ஆதரவை வழங்கும் என்பதை தெரிவித்தேன்.

மேலும், நாளை நேபாளத்தின் தேசிய தினம் என்பதால் அதை முன்னிட்டு அவருக்கும் நேபாள மக்களுக்கும் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்தேன்.” என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்

நேபாளத்தின் இடைக்கால பிரதமராக சுசீலா கார்கி தேர்ந்தெடுக்கப்பட்டதை அடுத்து கடந்த 13ஆம் திகதி மணிப்பூர் தலைநகர் இம்பாலில் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய பிரதமர் மோடி,


“நேபாளம் இந்தியாவின் நெருங்கிய அண்டை நாடு. அதன் இடைக்கால பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சுசீலா கார்கிக்கு இதயப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேபாளத்தில் அமைதி, நிலைத்தன்மை, செழிப்பு ஏற்பட சசீலா வழிவகுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவர் நேபாளத்தின் முதல் பெண் பிரதமராக பதவியேற்றுள்ளார். பெண்களுக்கு அதிகாரமளித்தலில் இது ஒரு நல்ல உதாரணம். நிலையற்ற ஒரு சூழலுக்கு மத்தியிலும் ஜனநாயக விழுமியங்களை உச்சத்தில் வைத்திருக்கும் நேபாள மக்கள் ஒவ்வொருவரையும் நான் பாராட்டுகிறேன்.

கடந்த சில நாள்களாக, நேபாள இளைஞர்கள் நேபாளத்தின் சாலைகளை சுத்தம் செய்து வண்ணம் தீட்ட கடுமையாக உழைத்து வருகின்றனர். அது தொடர்பான படங்களை சமூக ஊடகங்களில் பார்த்தேன். இது ஒரு நேர்மறையான பணி. அவர்களின் நேர்மறையான சிந்தனையும் நேர்மறையான பணியும் ஊக்கமளிப்பது மட்டுமல்ல, நேபாளத்தின் புதிய எழுச்சியின் தெளிவான அறிகுறி. நேபாளத்தின் பிரகாசமான எதிர்காலத்துக்கு நல்வாழ்த்துகள்.” என தெரிவித்திருந்தார்.

# பங்களாதேஷில் இருந்து ஊடுருவியர்களை பாதுகாக்க ராகுல் காந்தி முயற்சிக்கின்றார்

## அமித் ஷா குற்றச்சாட்டு



பங்களாதேஷில் இருந்து இந்தியாவுக்குள் ஊடுருவியர்களைப் பாதுகாக்கும் நோக்கிலேயே வாக்கு திருட்டு எனும் கதையை ராகுல் காந்தி பரப்புகின்றார் என மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

பிஹாரின் ரோட்டாஸ் நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அமித் ஷா,

“காங்கிரஸ் ஒவ்வொரு முறையும் தவறான கதையை பரப்புகிறார்கள். ராகுல் காந்தி பிஹாரில் ஒரு யாத்திரை மேற்கொண்டார். அந்த யாத்திரையின் தலைப்பு வாக்கு திருட்டு அல்ல. நல்ல கல்வி, வேலைவாய்ப்பு, மின்சார வசதி, சாலை வசதி ஆகியவற்றை வலியுறுத்தியும் அந்த யாத்திரை நடத்தப்படவில்லை.

அந்த யாத்திரையின் நோக்கம் பங்களாதேஷில் இருந்து வந்த ஊடுருவல்காரர்களைக் காப்பாற்றுவதாகும். உங்களில் யாராவது வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளீர்களா? இல்லை. இது முழுக்க முழுக்க ஊடுருவல்காரர்களை பாதுகாக்கும் யாத்திரை.

ஊடுருவல்காரர்களுக்கு வாக்களிக்கும் உரிமை அளிக்கப்பட வேண்டுமா? அவர்களுக்கு இலவச ரேஷன் வழங்கப்பட வேண்டுமா? அவர்களுக்கு வேலை வழங்கப்பட வேண்டுமா? வீடு வழங்கப்பட வேண்டுமா? 5 லட்சம் இந்திய ரூபா வரையிலான காப்பீடு மூலம் இலவச சிகிச்சை வழங்கப்பட வேண்டுமா?

நமது இளைஞர்களுக்காக அல்லாமல், வாக்கு வங்கி ஊடுருவல்காரர்களுக்காக வேலை வாய்ப்பை வழங்குகிறார் ராகுல் காந்தி. தப்பித் தவறி அவர்களின் அரசாங்கம் அமைந்துவிட்டால் பிஹாரின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊடுருவல்காரர்கள் மட்டுமே இருப்பார்கள். எனவே, இது குறித்து வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.” என தெரிவித்துள்ளார்.





# காசா கொடூரத்தை தடுத்து நிறுத்த உலகம் ஒன்றிணைய வேண்டும்

## முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை

“காசாவில் அரங்கேறி வரும் கொடுமைகளை தடுக்க இந்தியா உறுதியான நிலைப்பாட்டோடு பேச வேண்டும், உலகம் மொத்தமும் ஒன்றிணைய வேண்டும். இந்தக் கொடூரத்தை இப்போதே தடுத்து நிறுத்த நாம் அனைவரும் இணைந்து செயல்படவேண்டும்.”

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் பகிர்ந்த சமூக வலைதளப் பதிவில்,

“காசாவில் அரங்கேறி வரும் கொடுமைகளால் வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு அதிர்ந்து போயிருக்கிறேன். அங்கிருந்து வெளிவரும் ஒவ்வொரு காட்சியும் நெஞ்சைப் பதறச் செய்கிறது.

பச்சிளம் குழந்தைகளின் அழுகுரல், பட்டினியில் தவிக்கும் சிறார்கள், மருத்துவமனைகள் மீது நடத்தப்படும் குண்டு வீச்சு, ஐ.நா. விசாரணை ஆணையமே அங்கு இனப்படுகொலை நடந்து வருவதாக அளித்துள்ள அறிக்கை ஆகிய அனைத்தும், எந்த மனிதரும் எப்போதும் அனுபவிக்கக் கூடாத துன்பங்களை அங்கு அனுபவித்து வருவதையே காட்டுகிறது.

அப்பாவி மனித உயிர்கள் இப்படி கொல்லப்படும்போது, அமைதியாக இருப்பது என்பது ஒரு தேர்வாக இருக்க முடியாது. நம் ஒவ்வொருவரின் மனசாட்சியும் விழிக்க வேண்டும். இந்தியா உறுதியான நிலைப்பாட்டோடு பேச வேண்டும், உலகம் மொத்தமும் ஒன்றிணைய வேண்டும். இந்தக் கொடூரத்தை இப்போதே தடுத்து நிறுத்த நாம் அனைவரும் இணைந்து செயல்படவேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# இராஜதந்திர சவாலை ஏற்படுத்தியுள்ள சவூதி – பாகிஸ்தான் பாதுகாப்பு ஒப்பந்தம்





பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் சவூதி அரேபியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தின் போது, இரு நாடுகளுக்கும் இடையே ஒரு முக்கிய பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

அந்த ஒப்பந்தத்தின்படி, பாகிஸ்தான் அல்லது சவுதி அரேபியாவை யாராவது தாக்கினால், அது இரண்டு நாடுகளின் மீதான தாக்குதலாகக் கருதப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பிராந்திய அரசியலில் புதிய தாக்கங்களை ஏற்படுத்தலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஒப்பந்தம், இரு நாடுகளின் பாதுகாப்பையும் ஒன்றிணைத்து, பரஸ்பர பாதுகாப்பு உறுதிமொழியை வழங்குகிறது.

இதன் மூலம், ஒரு நாடுகளும் தாக்கப்படும்போது, ஏனைய நாடும் பதிலடி கொடுக்க வேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது.

கட்டாரில் உள்ள ஹமாஸ் அலுவலகங்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்குப் பின்னர், மத்திய கிழக்கு நாடுகள் இடையே பதற்றம் நிலவி வருகிறது.

இந்தச் சூழலில் பாகிஸ்தான் பிரதமர் முதலில் கட்டாருக்கும், பின்னர் சவூதி அரேபியாவிற்கும் விஜயம் மேற்கொண்டமை, பிராந்தியத்தில் பாகிஸ்தானின் அதிகரித்துவரும் செல்வாக்கைக் காட்டுகிறது.

இந்த ஒப்பந்தம், ஏனைய மத்திய கிழக்குநாடுகளையும் இணைத்து நேட்டோ போன்ற ஒரு இராணுவக் கூட்டணியை உருவாக்கும் சாத்தியக்கூறுகள் உள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இந்த ஒப்பந்தத்தின் காரணமாக, இனி பாகிஸ்தானை இந்தியா தாக்கினால், சவூதி அரேபியாவும் பதிலடி கொடுக்க நேரிடும் என்ற சூழல் உருவாகியுள்ளது. இது இந்தியாவுக்கு ஒரு புதிய இராஜதந்திர மற்றும் இராணுவ சவாலை முன்வைக்கிறது.

பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் உடன் வெளியுறவு, பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சர்கள் சவூதிக்கு விஜயம் மேற்கொண்டமை, இந்த ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தையும், பாகிஸ்தான் அதற்கு அளிக்கும் முன்னுரிமையையும் வெளிப்படுத்தியுள்ளது.

இந்த பாதுகாப்பு ஒப்பந்தம், மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள அதிகார சமநிலையை மாற்றி அமைக்கும் ஒரு முக்கியமான நகர்வாகக் கருதப்படுகிறது.







# பிரித்தானியாவில் ட்ரம்புக்கு பிரமாண்டமான அரச விருந்து

பிரிட்டனுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு, பக்கிங்ஹாம் அரண்மனையில் பிரித்தானிய அரச குடும்பத்தினர் பிரமாண்டமான அரச விருந்து அளித்துள்ளனர்.

விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மண்டபத்தில், 155 அடி நீளமுள்ள மேசை அமைக்கப்பட்டது. இந்த மேசை முழுக்க, வெள்ளிப் பாத்திரங்கள், தங்க நிறத்திலானபொருள்கள்,மற்றும்மெழுகு வர்த்தி அலங்காரங்கள் இடம்பெற்றிருந்தன.

விருந்திற்காக பிரிட்டன் இராணுவத்தின் பாதுகாப்புப் பிரிவினர், அரண்மனையின் ஊழியர்கள் என நூற்றுக்கணக்கானோர் பணியாற்றினர் என கூறப்படுகிறது.

ஜனாதிபதி ட்ரம்ப்புக்கு அளிக்கப்பட்ட இந்த வரவேற்பு, அமெரிக்கா – பிரிட்டன் இடையிலான வலுவான உறவை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# இன்றைய ராசி பலன்கள் -19.09.2025

## மேஷம்

இன்று இனிமையான நாளாக இருக்கும்.உங்கள் கடின முயற்சி மூலம் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும்.

நீங்கள் புத்திசாலித்தனத்துடன் ஆற்றும் பணிக்காக உங்கள்மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.உங்கள் கீழ்பணிபுரிவோர்களிடமும் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

பாதுகாப்பற்ற உணர்வை தவிர்ப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.உங்கள் குழந்தையின் வளர்ச்சி பற்றிய கவலை உங்களிடம் காணப்படும்.

இன்று உங்களால் பணம் சேமிக்க இயலும்.எதிர்பாராத வகையில் இன்று பணவரவு காணப்படும்.

தேக ஆரோக்கியம் சிறந்த நிலையில் காணப்படும்.

## ரிஷபம்

பலதடைகளுக்குப்பின்உங்களுக்கு திருப்தி கிடைக்கும்.உங்கள் மனதை ஓய்வாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பணிச்சுமை அதிகரித்துக் கொண்டே போவதைக் காண்பீர்கள்.பணியில் தவறுகள் நேரலாம்.

உங்கள் வார்த்தைகள் உங்கள் துணையின் மனதை காயப்படுத்தும்.நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இதனைத் தவிர்க்க வேண்டும்.

இன்று பணத்தட்டுப்பாடு காணப்படும்.அதிகரிக்கும் செலவினங்கள் காரணமாக நீங்கள் கவலைக்குள்ளாவீர்கள்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு ஆளாவீர்கள்.

## மிதுனம்

பொழுது போக்கு நிகழ்ச்சிகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பாடல்கள் கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணிச்சூழல் கடினமாக இருப்பதாக உணர்வீர்கள்.கடினமான வேலை செய்ய வேண்டியிருப்பதன் காரணமாக மகிழ்ச்சியின்றி காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.உங்கள் மனதில் உள்ள குழப்பம் உங்கள் மகிழ்ச்சியை தடுக்கும்.

இன்று சீரற்ற பணப்புழக்கம் காணப்படும்.உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நிலைமை காணப்படாது.

நீங்கள் தியானம் மேற்கொள்வதன் மூலம் மனதை அமைதியாகவும் ஓய்வாகவும் வைத்துக் கொள்ள முடியும

## கடகம்

இன்று நீங்கள்அனுசரித்துச் செல்ல வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்கள் நிதிநிலைமையை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.உங்கள் தகுதிக்கு மீறி செலவு செய்வீர்கள்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

## சிம்மம்

இன்று லாபகரமான நாளாக இருக்கும்.அக்கம் பக்கத்தினரின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.இன்று நல்ல விஷயங்களை செய்வீர்கள்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.அவர்கள் உங்கள் பணிகளைப் பாராட்டுவார்கள்.உங்கள் திறமைகள் மதிக்கப்படும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள்.உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்களுக்கு தொலைதூரத்திலிருந்து பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. இந்தப் பணம் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் பற்றி கவலைப்படத் தேவையில்லை.சிறப்பாக இருக்கும்.

## கன்னி

சாதகமான வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்வதன் மூலம் முன்னேறலாம்.ஆன்மீக நோக்கத்திற்கான பயணங்கள் சாதகமான பலன்களைத்தரும்.

உங்கள் சிறந்த பணியாற்றும் முறை காரணமாக நீங்கள் நற்பலன்களைப் பெறுவீர்கள்.உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள்.இதனால் நல்ல புரிந்துணர்வு அமையும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படும். உங்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் உங்கள் உடலை சீராக வைத்திருப்பீர்கள்.

## துலாம்

உங்களுக்கான சரியான வழியை தேர்ந்தெடுக்க நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள்.நீங்கள் திறமையாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

மேலதிகாரிகளுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. அவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் சச்சரவுகளை தவிர்க்கலாம்.

உங்கள் துணையிடம் வன்மையாக நடந்து கொள்வதை தவிர்க்கவும்.உங்கள் துணையிடம் நல்லுறவை தக்க வைத்துக்கொள்ள முயலுங்கள்.

இன்று பணவரவிற்கு சாதகமான சூழ்நிலை அமையாது.நீங்கள் பணத்தை சேமிக்க வேண்டும்.பணத்தை பத்திரமாக பாதுகாப்பாக கையாண்டால் பண இழப்பை தவிர்க்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.வேலைகள் அதிகமாக இருப்பதன் காரணமாக பதட்டங்கள் காணப்படும்.

## விருச்சிகம்

இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது.இன்று குழப்பமான நிலையில் இருப்பீர்கள்.நீங்கள் எடுக்கும் முடிவுகள் தவறாக இருக்கும்.

வளர்ச்சி குறைந்து காணப்படுகின்றது.பணிச்சுமை அதிகரித்து காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்குள் முடிக்க நீங்கள் திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடனான தொடர்புகொள்ளலில் பிரச்சினைகள் காணப்படும்.இன்றைய நாளின் வனப்பு அதனால் கெடும்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரைஇன்று அவ்வளவு சிறப்பாக இருக்காது. நீங்கள் சேமிக்க வேண்டியது அவசியம்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகளை சந்திப்பீர்கள். எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்கவும்.

# இன்றைய ராசி பலன்கள் -19.09.2025




புதிய தொடர்புகள் இன்று உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். இன்று பயணங்கள் காணப்படும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும்.உங்கள் உழைப்பிற்கு பலன் கிடைக்கும்.நீங்கள் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடனான உறவில் சம நிலையோடு இருங்கள்.இன்றைய நாள் சிறப்பாக இருக்கும்.

உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும்.உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் காணப்படாது.நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




முறையான திட்டமிடல் மூலம் கடினமான விஷயங்களையும் எளிதில் கையாளலாம்.

நீங்கள் முறையாக பணிகளை ஆற்ற இயலாது. உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.இன்று உங்களால் நல்லிணக்கத்தை பராமரிக்க இயலாது.

ஆன்மிக காரியங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.இது உங்களுக்கு ஆறுதலைத் தரும்.பயணங்களால் செலவுகள் ஏற்படும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.தோள்களில் வலிகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.




உங்கள் பிரச்சினைகள் பற்றிக் கவலைப்படாமல்மகிழ்ச்சியுடன் இருங்கள்.கோவிலுக்குச் சென்று வருவது ஆறுதலைத் தரும்.

நீங்கள் செய்த பணிக்கு பாராட்டுபெறுவீர்கள்.பணிகள் ஆற்றுவதில் சில தாமதங்கள் காணப்படும்.

நீங்கள்இன்று உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேசுவீர்கள்.அதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் திருப்திகரமாக இருக்கும்.உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

கண்களில் தொற்று போன்ற சிறிய உபாதைகள் காணப்படும்.தகுந்த மருத்துவ சிகிச்சை உங்கள் நலனை பாதுகாக்கும்.




சில தடங்கல்களுக்குப் பின் உங்களுக்கு திருப்தி கிடைக்கும். உங்கள் கவலைகளை மறக்க மனதை அமைதியாக வைத்திருங்கள்.

உங்கள்பணியில்சிலஅசௌகரியங்களை எதிர்கொள்வீர்கள். பணிச்சுமை அதிகரித்துக் கொண்டேயிருக்கும். நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுவீர்கள்.

இன்று உங்கள் பேச்சில் கடுமை காணப்படும். இது உங்கள் நாளின் இனிமையைக் கெடுக்கும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது. இன்று அதிகரிக்கும் செலவினங்கள் காணப்படும்.

உங்கள் கால்களில் வலிகள் ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

# காதலியின் கண்களில் மிளகாய் பொடி தூவி தங்க நகைகளைக் கொள்ளையிட்ட காதலன்!



களுத்துறை, இங்கிரிய, ஹதபான்கொட பிரதேசத்தில் காதலன் தனது காதலியின் கண்களில் மிளகாய் பொடி தூவி தங்க நகைகளைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று இங்கிரிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கிடைத்துள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் கடந்த 16 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் ஒருவர் இளைஞர் ஒருவனுடன் ஒன்றரை வருட காலமாகக் காதல் உறவில் ஈடுபட்டிருந்துள்ளார்.

பின்னர் இருவருக்கும் இடையில் காதல் முறிவு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தப் பெண் கடந்த 16 ஆம் திகதி இரவு வழமை போல ஆடைத் தொழிற்சாலையில் கடமைகளை முடித்துவிட்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கும் போது வீதியில் மறைந்திருந்த ஒருவர் இந்தபி பெண்ணின் கண்களில் மிளகாய் பொடியைத் தூவி விட்டு அவரிடம் இருந்த தங்க நகைகள், கையடக்கத் தொலைபேசி மற்றும் பணம் ஆகியவற்றைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து இந்தப் பெண் பிரதேச மக்களின் உதவியுடன் ஹொரணை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பின்னர் இந்தப் பெண் இது தொடர்பில் இங்கிரிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

கண்களில் மிளகாய் பொடியை தூவி தங்க நகைகளைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்ற நபர் தனது காதலன் என அந்தப் பெண், பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் இங்கிரிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.